இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 06-06-2025

# நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் வேண்டும்!

பகல்காம் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக விளக்கம் அளிக்க, விவாதிக்க நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று பிரதமர் நரேந்திரமோடிக்கு 16 எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம், பஹல்காம் மாவட்டம், பைசரன் பள்ளத்தாக்கில் பயங்கர தீவிரவாதிகள் கடந்த ஏப்ரல் 22 ஆம் தேதி நடத்திய தாக்குதலில் 26 உயிர்கள் கொல்லப்பட்டன. இருபதுக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தார்கள். இந்த கொடூரச் சம்பவம் நடக்கும் போது வெளிநாட்டில் இருந்தார் பிரதமர் மோடி. உடனடியாக நாடு திரும்பினார். ஆனால் சம்பவம் நடந்த பகல்காம் மாவட்டம் செல்லவில்லை. காயமடைந்த மக்களை மருத்துவமனைக்குச் சென்று பார்க்கவில்லை. உயிரிழந்தோர் உடலுக்கு அஞ்சலி செலுத்தவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தை ஒன்றிய அரசு நடத்தியது. அதிலும் கலந்து கொள்ளவில்லை. உடனடியாக நாடு திரும்பிய அவர், பீகாரில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தியது. பாகிஸ்தானியர்களுக்கு விசா வழங்குவதை நிறுத்தியது. இந்தியாவில் உள்ள பாகிஸ்தானியர்களை உடனடியாக வெளியேற்றச் சொன்னது. அட்டாரி – வாகா எல்லை மூடப்பட்டது. பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. பாகிஸ்தான் தூதர் அழைக்கப்பட்டு கண்டிக்கப்பட்டார். இவை அனைத்தும் பயங்கரவாதச் சம்பவம் நடந்த பிறகு நடத்தப்பட்டவை.

'ஆபரேஷன் சிந்தூர்' என்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. 'பகல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடி தருவது தொடர்பான முடிவுகளை மேற்கொள்ள பாதுகாப்புப் படையினருக்கு முழு சுதந்திரம் உள்ளது. தாக்குதல் இலக்குகள், நேரம், தாக்குதல் நடத்தும் முறை குறித்து பாதுகாப்புப் படையினரே முடிவுகள் எடுக்கலாம்' என்று பிரதமர் மோடி அறிவித்தார்.

மே 7 ஆம் தேதியன்று 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் மிகப்பெரிய தாக்குதலை இந்திய ராணுவம் தொடுத்தது. பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளின் முகாம்களை அழிக்க இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலில் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார். பயங்கரவாத அமைப்பு ஒன்றின் தலைவரான மசூத் அசாரின் குடும்பத்தைச் சேர்ந்த பத்துப் பேரும் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதைத் தொடர்ந்து இந்திய எல்லைக்குள் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. இந்தியாவில் உள்ள 15 நகரங்களைக் குறி வைத்தது பாகிஸ்தான். ஏவுகணைகள், டிரோன்களை அனுப்பியது. இதனை இந்திய ராணுவம் வானில் முறியடித்தது. இதைத் தொடர்ந்து பாகிஸ்தானை நோக்கி, இந்தியா தனது தாக்குதலை நடத்தியது. லாகூர் வான் பாதுகாப்பு அமைப்பு சிதைக்கப்பட்டது. பாகிஸ்தானின் 4 விமானங்களை இந்தியா வீழ்த்தியது.

திடீரென இந்தத் தாக்குதல் நிறுத்தப்பட்டது. இந்தப் போர் நிறுத்தத்தை அமெரிக்காதான் முதலில் அறிவித்தது. இதற்கு இந்தியா இதுவரை பதில் சொல்லவில்லை. அமெரிக்க அதிபர் இதனையே திரும்பத் திரும்ப பலமுறை சொல்லிவிட்டார். சொல்லிக் கொண்டும் இருக்கிறார். **"இதுதான் பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் குணம். அவர்கள் அடிபணிபவர்கள் என்பதற்கு வரலாறே சாட்சி"** என்று விமர்சித்த காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, 1971 ஆம் ஆண்டு பிரதமர் இந்திராகாந்தி, சிங்கம் மாதிரி நடந்து கொண்டார் என்பதையும் சுட்டிக் காட்டி இருக்கிறார். இத்தகைய அரசியல் விவாதங்கள் தொடங்கி நடந்து வருகிறது. இந்த நிலையில் எதிர்க்கட்சிகளின் முக்கியமான கோரிக்கை வெளியாகி இருக்கிறது.

**"பயங்கரவாதத் தாக்குதல், ஜம்மு - காஷ்மீரில் உள்ள பூஞ்ச், உரி, ரஜௌரியில் பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் கொல்லப்பட்டது, சண்டை நிறுத்தம் ஆகியவற்றால் நமது தேசியப் பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட தாக்கங்கள் ஆகியவை பற்றி நாட்டு மக்களுக்கு ஏராளமான கேள்விகள் உள்ளது. பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து உலக நாடுகளுக்கு எடுத்துரைப்பதற்கான அரசின் முயற்சிகளை எதிர்க் கட்சிகளான நாங்கள் ஆதரித்தோம். இந்த விவகாரம் தொடர்பாக வெளிநாட்டுத் தூதர்களுக்கும், ஊடகங்களுக்கும் ஒன்றிய அரசு விளக்கம் அளித்துள்ளது. ஆனால் நாடாளுமன்றத்துக்கு இதுவரை எந்த விளக்கமும் அளிக்கவில்லை. இந்திய மக்களுக்கும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் ஒன்றிய அரசு முறையான தகவல் தெரிவிக்கவில்லை. எனவே உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டி விளக்கம் அளிக்க வேண்டும்"** என்று பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் வேண்டுகோள் வைத்துள்ளார்கள். இந்தக் கடிதத்தில் தி.மு.க. உள்பட 16 கட்சிகள் கையெழுத்துப் போட்டுள்ளன.

பஹல்காம் தாக்குதல் நடத்தப்பட்டதில் இருந்து நாடாளு மன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்துள்ளன. ஆனால் அதனைக் கேட்கவில்லை ஒன்றிய அரசு. எதிர்க்கட்சித் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் கூட பிரதமர் கலந்து கொள்ளவில்லை.

**பயங்கரவாதத் தாக்குதலுக்குக் காரணமான தீவிரவாதிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை. அவர்கள் இருக்குமிடம் அடையாளம் காணப்படவில்லை. திடீரென போர் அறிவிக்கப்பட்டது, போர் நடந்தது, போர் நிறுத்தப்பட்டது. இவை குறித்து ஒன்றிய பா.ஜ.க. அரசு சரியான விளக்கத்தை இன்னும் சொல்லவில்லை. சொல்ல வேண்டிய கடமை ஒன்றிய அரசுக்கு இருக்கிறது. இது குறித்து விவாதிக்க நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் உடனடியாகக் கூட்டப்பட வேண்டும்.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.6.2025) கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 130வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மலர் போர்வை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்வின்போது, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, நவாஸ்கனி, எம்.எம். அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர் எம். அப்துல் வஹாப், துணை மேயர் மு.மகேஷ்குமார், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பொதுச் செயலாளர் அபுபக்கர், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு, கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர். சுபேர்கான், சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் எஸ்.எச்.ரஹ்மத்துல்லா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## காணொலிக் காட்சி வாயிலாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **"மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதி பார்வையாளர்கள் கூட்டம்"** 07-06-2025 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில், காணொலி காட்சி வாயிலாக நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் - நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் - தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : உறுப்பினர் சேர்க்கை**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்: 05-06-2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# உலக சுற்றுச் சூழல் தின விழாவில் முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

பல்லுயிர்ப் பெருக்கம், காலநிலை மாற்றம் இந்த இரண்டுக்கும் இடையில் வலுவான தொடர்பு இருக்கிறது. இதை உணர்ந்து அதற்கேற்ப செயல்பட்டு வரும் முன்னோடி மாநிலமாக இருப்பது நம்முடைய தமிழ்நாடு தான்!

**தமிழ்நாடு அருகிவரும் உயிரினங்கள் நிதியம்!**

யானைகள் மற்றும் புலிகள் போன்ற காடுகளின் ஆதாரமான உயிரினங்களைப் பாதுகாப்பதில் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். மற்றொரு புறம், அதிகம் அறியப்படாத மற்றும் அருகி வரக்கூடிய உயிரினங்களை, "தமிழ்நாடு அருகிவரும் உயிரினங்கள் நிதியத்தின்" மூலம் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறோம்.

தொடக்கத்திலேயே நாம் எதிர் கொண்டிருக்கும் நெருக்கடியைப் பற்றிச் சொன்னேன். அரசாங்கம் செயல்படுத்துகின்ற திட்டங்களால் மட்டும் இந்த நெருக்கடியைத் தீர்த்து விட முடியாது. ஊர் கூடித்தான் தேர் இழுக்கவேண்டும்! அதனால்தான், தொழில்களுக்கான "தன்னார்வ பசுமை மதிப்பீட்டை" அறிமுகப்படுத்தி இருக்கிறோம். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்கின்ற பொறுப்புணர்ச்சி, தொழில்துறை வளர்ச்சியின் மையமாக இருக்க வேண்டும். சுற்றுச்சூழ லைக் காக்கின்ற செயல்பாடுகள், பொருளாதார வளர்ச்சி இலக்கோடு இணைந்து செயல்பட முடியும்!

நம்முடைய கனவு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் மட்டும் கிடையாது அது ஒரு பசுமைப் பொருளாதாரமாக இருக்க வேண்டும் என்பது தான் இந்த மாற்றத்தை வழி நடத்துவதற்கான கருவிகள், வாய்ப்புகள் மற்றும் பொறுப்புகளை நம்முடைய இளைஞர்களுக்கு வழங்க முதலமைச்சரின் பசுமைத் தோழர்களின் முதல் பேட்ச், இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்யப் போகிறார்கள். இரண்டாவது பேட்ச் விரைவில் இணைவார்கள். முதல் பேட்ச் தொடங்கிய பணிகளை அவர்கள் முன்னெடுத்துச் செல்வார்கள்.

**மாசு கட்டுப்பாட்டு வாரியக் கட்டடத்துக்கு பசுமைச் சான்றிதழ்!**

இந்த ஆண்டிலிருந்து, நம்முடைய தனித்துவமான உயிரினங்களின் ஆராய்ச்சி, கல்வி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த தொடர்ச்சியாக புதிய பாதுகாப்பு மையங்கள் நிறுவப்படும். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்துக்கான புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். பசுமைச் சான்றிதழ் பெறும் கட்டிடமாக இது உருவாகும்.

**மஞ்சப்பை கொண்டு நெகிழி பயன்பாட்டை ஒழிப்போம்!**

2021ஆம் ஆண்டு, பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்த்துப் போராட "மீண்டும் மஞ்சப்பை" திட்டத்தைத் தொடங்கினோம். இது அரசின் திட்டமாக இருந்தால் போதாது! மக்கள் இயக்கமாக மாறவேண்டும்! அரசாங்கம் திட்டங்களைக் கொண்டுவரத்தான் முடியும். அதன் வெற்றி மக்கள் தங்களின் அன்றாடப் பழக்கங்களை மாற்றிக்கொள்வதில்தான் இருக்கிறது. தொடக்கத்தில் கஷ்டமாகதான் இருக்கும். ஆனால், வேறு வழி இல்லை. இந்த ஆண்டு சுற்றுச்சூழல் நாளின் 'தீம்' "நெகிழி மாசுபாட்டை ஒழிப்போம்" என்பதுதான். இன்றைக்கு பிளாஸ்டிக் மாசுபாடு நம்முடைய பூமியை மூச்சுத் திணற வைத்துக்கொண்டு இருக்கிறது. வெளியே புறப்பட்டால், செல்போனை சார்ஜ் செய்துவிட்டுதான் எல்லோரும் புறப்படுகிறோம். அதுபோல, மறக்காமல் துணிப்பை மற்றும் தண்ணீர் பாட்டில் இல்லாமல், வீட்டை விட்டு வெளியே புறப்படமாட்டோம் என்று உறுதிமொழி எடுத்துக்கொள்வோம். இந்த சிறிய செயல் நம்முடைய கூட்டுமுயற்சிக்கு ஒரு தொடக்கமாக இருக்கட்டும்.

**கைவிடப்பட்ட மீன்வலைகளை அகற்றும் முயற்சி!**

இன்றைய நாள், கடல் மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான பரப்புரையை விரிவுபடுத்துகிறோம். மேலும், தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களிலும் 'கைவிடப்பட்ட' மீன் வலைகளை அகற்றும் முயற்சியும் தொடங்கப்படுகிறது. 'தூய்மை மிஷன் - இது குப்பை மேட்டர் இல்லை'என்று ஒரு இயக்கத்தை தொடங்கப் போகிறோம் என்று சமூக ஊடகங்களில் அறிவித்திருக்கிறோம்.

**ஒழுக்கம் நமக்கும் இருக்க வேண்டாமா?**

இந்தியா ஏன் அமெரிக்கா போன்று இல்லை? ஜப்பான் போன்று இல்லை? ஐரோப்பா போன்று இல்லை? என்று நிறைய சினிமாவில் கேள்வி கேட்பார்கள். அது போன்று ஆகவேண்டும் என்றால், அந்த மக்களுக்கு இருக்கக்கூடிய சுய ஒழுக்கம் நமக்கும் இருக்க வேண்டாமா? அதற்கான முதல்படிதான் குப்பைகளை தரம் பிரித்துப் போடுவது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துகின்ற இந்த 'தூய்மை' மிஷன்!

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக அரசு அறிவிக்கின்ற அறிமுகப்படுத்தும் திட்டங்களை உங்கள் சொந்தத் திட்டமாக நினைத்து நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். நம்முடைய அரசைப் பொறுத்தவரை தீர்வுக்காகக் (solution) காத்திருப்பவர்கள் இல்லை. தீர்வை உருவாக்குகின்றவர்கள். இன்னும் ஒருபடி மேலே சென்று சொல்ல வேண்டும் என்றால், நாம் தான் தீர்வு! நம்முடைய திராவிட மாடல் அரசு, சமூக நீதிக்கான அரசு மட்டுமல்ல, சூழலியல் நீதிக்கான அரசாகவும் இருக்கும்! அதற்கு மக்களாகிய நீங்கள் துணை நிற்க வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

> **"வனக்காவலர்கள் நியமன ஆணைகளை இன்று வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள்தான் நம்முடைய காடுகளின் முதுகெலும்பு. எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், நம்முடைய சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் ஹீரோக்கள் நீங்கள்தான்! இந்தத் துறையின் அமைச்சர்களான ராஜகண்ணப்பன் அவர்களும், தங்கம் தென்னரசு அவர்களும், துறைச் செயலாளரான திருமதி சுப்ரியா சாகு ஐ.ஏ.எஸ். அவர்களும் இதை Just ஏதோ பொறுப்பாகப் பார்க்காமல், தனிப்பட்ட முறையில் ஆர்வத்தோடும் அக்கறையோடும் செயல்பட்டு நம்முடைய அரசுக்குப் பெருமை சேர்க்கிறார்கள். அதற்காக, என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்."**